
உ

# ஸ்கந்தபுரம் முருகன் ஆலய மணிக்கோபுர கும்பாபிஷேக விஷேச மலர்



# “ஒலிக்கும் மணியோசை”

## 16.07.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# "ஒலிக்கும் மணியோசை"



## ஸ்கந்தபுரம் முருகன் ஆலய மணிக்கோபுர கும்பாபிஷேக விஷேச மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிக்கோபுர ஸ்தாபகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதமகுருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை



"தொட்டில் பழக்கம் சுடு காடுவரை" என்ற பழமொழி எனது வாழ்கையில் காலத்திற்குக் காலம் மெய்யாக்கப்பட்டு வந்திருந்ததை உணர்ந்துள்ளேன். சிறு வயதிலிருந்தே எனக்குப் பொதுப்பணிகளில் ஈடுபடுவதில் ஆர்வமிருந்தது.

பாடசாலையில் படிக்கும் போதே இளைஞர் விவசாயக் கழகத்தில் இணைந்து செயற்பட்டு விவசாய திணைக்களத்தின் ஆதரவோடு பல புதிய கழகங்களை உருவாக்கி பின் யாழப்பாண மாவட்ட கழகங்களின் சமாஜத்திற்கு பொதுச் செயலாளராக தெரிவாகி செயற்பட்டேன். இலங்கை வானொலி கிராம சஞ்சிகை நிகழ்ச்சியில் இளைஞர் விவசாயம் பற்றி கலந்துரையாடல்களில் பங்கேற்பு என்பதோடு விவசாயம் சம்பந்தமான போட்டிகளில் பங்குபற்றி பரிசுகள் பெற்ற நான் கண்டியில் விவசாயக் கல்லூரியில் விவசாயம் படிக்க அனுமதிக்கப்பட்டேன்.

குடியேற்ற அதிகாரியாக 1961ம் ஆண்டு நியமனம் கிடைத்த காலம் முதல் கடமை செய்த சகல குடியேற்றத் திட்டங்களிலும் அரச சேவையை விடவும் தனிப்பட்ட முறையில் மக்களின் அறிவு ஆத்மீகம் ஆரோக்கியம் போன்ற விடயங்களில் என்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வந்துள்ளேன். சம்மாந்துறையில் மஜீதியாபுரம் என்ற முஸ்லீம் குடியேற்றத்தில் ஒரு வாசிகசாலையை உருவாக்க உதவினேன். அங்கு ஆத்மீகம் ஆரோக்கியம் சம்பந்தமாக எதுவும் செய்யக்கூடிய நிலைமை இருக்கவில்லை. ஆனால் அதன் பின்னர் கடமை செய்த அக்கராயன் ஸ்கந்தபுரம் தமிழ்க் கிராமமாகவும் கூடுதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மக்கள் வாழ்திருந்ததாலும் குடியேற்ற ஆரம்பக்காலம் என்பதாலும் அதனால் தேவைகள் பல இருந்தன. எனக்கு எனது பொதுப்பணியை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பான இடமாக அடையாளம் கண்டேன். அங்கு பல பணிகள் புரியக்கூடியதாகவும் சமயத் தொண்டிலும் ஈடுபடக் கூடியதாக கொடுத்து வைக்கப்பட்டிருந்தேன்.

அறிஞர் அண்ணாவின் பகுத்தறிவுப் பாசறையில் புத்தகங்கள் பல படித்ததின் காரணமாக மெய்ஞானத்தை உணராதிருந்த எனக்கு ஸ்கந்தபுரத்தில் ஆரம்பித்த சிரமதானத் தொண்டு சிவத்தொண்டாக பரிமாணம் பெற்றது. ஒரு கோவில் உற்பத்திக்கு என்னையும் பங்களிப்புச் செய்ய முருகப் பெருமானின் சித்தம் இருந்துள்ளது. சில காலமாக பொலன்னறுவ மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் காணி அதிகாரியாகவும் பின்னர் திருகோணமலையில் மாவட்டக் காணி அதிகாரியாகவும் உதவிக் காணி ஆணையாளராகவும் கடமையாற்றிய வாய்ப்பு கிடைத்தது. இதனிடையே வெளிவாரி மாணவராக கொழும்பு பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்று சட்டத்தில் சட்டமானி பட்டம் பெற்றதினால் நான் சேவையில் முழுக்காலத்தையும் முடிப்பதற்கு முன்னரே ஓய்வு பெற்று சட்டத்துறைக்குள் பிரவேசித்து சட்டத்தரணியானேன்.இந்த உயர்வுக்கும் கீர்த்திக்கும் செல்வத்திற்கும் மக்களுக்கான நேர்மையான அரச கடமை உணர்வும் உள்ளார்ந்த ஆத்மீக சிந்தனையும் எனக்கு வழிவகுத்துள்ளது என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. எந்தக் கடமையென்றாலும் அதை முழு மனதோடும் சரிவரச் செய்தும் வந்தால் அதுவே கடவுள் பணியாக பரிமாணிக்கும். முருகப் பெருமானுக்கான இந்த மணிக் கோபுரத்தை எனது பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக நிர்மாணித்துள்ளேன்.

********

சட்டத்தரணி கனக நமநாதன் எல்.எல்.பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிவஞானம் சிறீதரன் அவர்களின் வாழ்த்துரை


M.Ed., B.A., PGDE(Me)., Sp.Tr.(Ag)

+94 21 3207584, +94 21 2280024
+94 21 2221655, +94 21 2280024
+94 77 6913244

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

M.Ed., B.A., PGDE(Me)., Sp.Tr.(Ag)
Jaffna Electoral District
662, Arumugam Road,

Tel: +94 21 3207584
Fax: +94 21 2221655
Mob: +94 77 6913244


2015. 06 15

## கந்தன் மணியோசை துயர்தீர்க்கும் மருந்து.

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் எழுந்தருளி மக்களுக்குத் துயர்தீர்க்கும் வடிவமாக நெடுங்காலம் அருளாட்சி செய்யும் முருகப்பெருமானின் சந்நிதியில் மணிக்கோபுரம் அமைக்கப்பட்டு புதுமெருகு பெறும் இவ்வேளையில் அந்த ஆனந்த பக்திப் பூரிப்பில் நானும் கலந்து கொள்வதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன் . ஸ்கந்தபுரம் மண் எமது மக்களின் அடைக்கலம் தரும் தாயாக இருந்து உணவளித்து உறங்கவும், வாழவும் வழி செய்த்து இருந்த தாய்போன்றது. அந்த மண்ணிற்கு இத்தகு சக்தியை மத்தியில் அமைந்து அருள்கொடுக்கும் கந்தப்பெருமானே தந்தருளியிருந்தான் என்றால் மிகையில்லை. பல ஆயிரக்கணக்கான மக்கள் இந்த முருகனின் சந்நிதியில் நேர்த்தி வைத்து தங்கள் பலன்களை பெற்றுள்ளார்கள் என்பது கந்தனின் பெருமை. மகிமையும் கருணையும் நிறைந்த கந்தனின் அருளில் கட்டுண்டுவர்களின் தொண்டில்தான் இந்த மணிக்கோபுரம் எழுந்துள்ளது. அவர்களுக்கு ஸ்கந்தபுரம் கந்தபெருமான் நிறைந்த அருளை வழங்குவான். ஆலய மணியோசை என்பது முப்பொழுதும் ஆலயச் சூழலில் வாழும் மனிதர்களுக்கு ஒரு மருந்த போன்றது. மனிதர்களை நேரிய சிந்தனையில் வழி நடக்கும் பண்பு மிக்கது. பிறவியை கடவுளை நினைக்க வைக்கும் அரவணைக்கும் கரமும் அழைப்பும் போன்றது. ஆலயங்களின் மணியோசையில் தான் பொழுதுகள் இயங்குகின்றன. எனவே கிளிநொச்சியில் ஸ்கந்தபுரத்தில் அருள்பாலிக்கும் கந்தப்பெருமானின் சந்நிதி மணிக்கோபுரம் காண்பது பக்த பெருமக்களுக்கு ஆனந்தம் தருவது. மணிக்கோபுர பெருவிழாவின் மகிழ்வில் நானும் கலந்து கொண்டு மக்களின் நலனுக்காக வணங்குகின்றேன்.

நன்றி

S.Shritharan,
Memeber of Parliment,
Jaffna Electoral District,
Kilinochchi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

## "முருகன் அருள் பாளிக்கட்டும்"



ஸ்கந்தபுரம் முருகன் ஆலயத்திற்கு 1986ம் ஆண்டுக் கடைசியிலிருந்து குருக்களாக எனது தந்தையாரான பாலகிருஸ்ண சர்மா பணிபுரியத் தொடங்கினார். நான் சிறுவயதினராக இருந்த பொழுதிலேயே தந்தைக்கு உதவியாளராக செயற்பட்டு அனுபவமும் ஆற்றலும் பெற்றவரானேன். அதன் பின்னர் தந்தையார் சுகவீனம் காரணமாக அட்சகராக செயற்பட முடியாத நிலைமை ஏற்பட்டதால் நான் 1990ம் ஆண்டிலிருந்து தொடரந்து குருக்களாக செயற்பட்டு வருகின்றேன். மூன்று. நேரப் பூசைகளும் காலம் தவறாமல் நடைபெறுகின்றது. விஷேட அபிஷேகங்கள் முக்கிய தினங்களில் இடம்பெறுகின்றன.

எனது காலத்தில் கோவிலில் பலர் பல திருப்பணிகளை மேற்கொண்டுள்ளார்கள். தற்போது மணிக் கோபுரத் திருப்பணி முடிவடைந்து புதிய மணியும் பொருத்தப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகின்றது. மணிக் கோபுரக் கலசத்திற்கும் மணிக்குமான கும்பாவிஷேகம் முதல்நாள் யாகத்துடன் ஆரம்பித்து 16.07.2015 அன்று காலை கும்பாவிஷேகம் நடைபெற எல்லாம் வல்ல முருகப் பெருமானின் அருளால் நிறைவேறவும் இந்தத் திருப்பணியை குறுகிய காலத்திற்குள் மேற்கொண்டு செய்து முடித்தவரும் அவரின் குடும்பமும் சீரும் சிறப்புடனும் வாழ கந்தப்பெருமான் அருள்புரியட்டும் என வாழ்த்துகின்றேன்.

ஆலய பிரதம குருக்கள்
பாலகிருஸ்ண சர்மா பாலச்சந்திர சர்மா
கிரியா சிரோன்மணி கிரியா அலங்கார வித்தகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் ஆலய சபை முன்னாள் தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



1962ம் ஆண்டு கிளிநொச்சி பிராந்தியத்தில் அக்கராயன்குளப் பகுதியில் ஒரு விவசாயக் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் யாழ்குடா தீவுப்பகுதி உள்ளிட்ட பல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 600 விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டனர். பெரும்பாலும் சைவ மரபினராகவும் கந்தபுராணக் கலாச்சாரமுடையவர்களாகவும் இருந்த அம்மக்கள் வழிபடுவதற்கு ஒரு கோயில் அமைப்பதற்கென அரச அதிகாரிகளால் 5 ஏக்கர் காணி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அக்காணியில் அன்று வாழ்ந்த முன்னோடிகளின் ஆதரவுடன் சைவ மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒரு பாலைமரத்தடியில் முருகப் பெருமானின் ஆயுதமாகிய வேல் ஒன்றை ஸ்தாபித்து வழிபடத் தொடங்கினார்கள். அதன் பின்னர் கந்தப் பெருமானுக்கு கோவில் ஒன்று அமைப்பதற்கு முற்பட்டதாலும் இந்தப் பகுதி ஸ்கந்தபுரம் என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

1968ம் ஆண்டு திரு. கனக நமநாதன் அவர்கள் குடியேற்றத்திட்ட அதிகாரியாக இங்கு வந்த பின்பு இவ்வூர் மக்களினது பங்களிப்புடன் 1971ம் ஆண்டு காடழித்து துப்பரவு செய்து கோவில் கட்டுமானப்பணி முன்னெடுக்கப்பட்டது. சிறுகச்சிறுக வளர்ச்சியடைந்த கட்டுமானத்திருப்பணி 1985ம் ஆண்டு ஒரு பிள்ளையார் ஆலயமும் அமைக்கப்பட்டு கும்பாவிஷேகம் செய்யப்பட்டு தொடர்ந்து 10 நாட்கள் அலங்காரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக்களும் இடம் பெற்று வந்தன. காலப்போக்கில் மகோற்சவம் நடாத்த விரும்பிய மக்கள் 1993ம் ஆண்டு ஆவணி மாத சஷ்டி திதியில் கொடியேற்றி பூரணையில் அன்று தீர்த்தோற்சவம் நடைபெறும் வண்ணம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2008ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகள் காரணமாக பாதிக்கப்பட்ட ஆலயம் 2012ம் ஆண்டு புனருத்தாபனம் செய்யப்பெற்று மீண்டும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. திரு. கனக நமநாதன் இடமாற்றம் பெற்றும் பணிநிலை மாற்றம் பெற்றும் வேறு மாவட்டங்களுக்குச் சென்றிருந்த போதிலும் எமது ஆலயத்துடன் மிகவும் அக்கரையுடன் செயற்பட்டு வந்துள்ளார். இவர் தற்போது சட்டத்தரணியாக தொழில் செய்கின்ற நிலைமையிலும் எமது குடியேற்றத்தையும் முருகன் ஆலயத்தையும் மறக்காமல் 2012லில் செய்யப்பெற்ற கும்பாபிஷேகத்தின் போது கணிசமான திருப்பணிகள் செய்துள்ளார்.

இந்த ஆலயத்தில் ஒரு மணிக்கோபுரம் அமையப்பெறாதது அவர் மனதை உறுத்தியது. அவர் தனது திருப்பணியாக 37 அடி உயர மணிக்கோபுரமும் அதற்குரிய காண்டா மணியையும் அமைத்துத்தர முன்வந்தார். அந்த யோசினையை என்னிடமே முதலில் கூறியிருந்தார். அந்தப்பணி இன்று நிறைவேறியுள்ளதையும் மணிக்கோபுரக் கலசத்துக்கும் புதியதான மணிக்கும் கும்பாபிஷேகம் 16.07.2015 அன்று நடைபெறவிருப்பதில் பெரு மகிழ்சியடைகின்றேன்.

இவ்வாலயத்தின் பரிபாலனசபை உறுப்பினராகவும் 2001 தொடக்கம் 2012 வரையிலான காலப் பகுதியில் இச்சபையின் தலைவராகவும் செயற்பட்டவர் என்ற வகையில் திரு. கனக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமநாதன் ஐயா அவர்களுக்கு எனது சார்பிலும் ஊர் மக்கள் சார்பிலும் மேலான நன்றிக்கடனை தெரிவித்துக் கொள்ள கடமையுள்ளவனாகின்றேன். ஐயாவும் அவரது வழித்தோன்றல்களும் சீரும் சிறப்புமாய் வாழ எல்லாம் வல்ல முருகப் பெருமான் அருள்புரிவாராக.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒலியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குரவாய் வருவாய் அருள்வாய் குகனே

**** சுபம் ****

க. இராசையா

(க. இராசையா)
ஓய்வு நிலை தபால் ஊழியர்,
முருகன் ஆலய சபை முன்னாள் தலைவர்,
இல.86 ஸ்கந்தபுரம் கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்கந்தபுரம் முருகன் ஆலயம்
# மணிக் கோபுரக் கும்பாபிஷேகம்
# விஷேச மலர்
# ஒலிக்கும் மணியோசை

கனக நமநாதன் (எல்.எல்.பி) சட்டத்தரணி

கடவுளின் அருள் உண்மையானது அன்பிலானது, ஆளமானது, அற்புதமானது, ஆச்சரியமானது. அது உண்மையும் அன்பும் மனத்தூய்மையும் இரக்கமும் கொண்டவனுக்கே உரித்தானது.

## கோயில் உற்பத்தியான வரலாறு

கடவுளின் அருள் தானாக வந்து கிடைக்காது. அருள் கிடைப்பதும் கிடையாமல் போவதும் ஒருவனின் மனத்திலே இருக்கும் தூய்மையான எண்ணத்தைப் பொறுத்ததாகும். எவன் ஒருவன் தனக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை முழு மனதுடன் செய்கின்றானோ அல்லது தானாக விரும்பிச் செய்யும் ஒரு செயலை முழு மனதுடன் செய்கின்றானோ அவனுடன் இறைவனும் ஒன்றிவிடுவான்.

### ஆரம்ப கால ஸ்கந்தபுர நிலைமை

நான் அக்கராயன்குள குடியேற்றத்திற்கு அரச கடமைக்காக வருவேன் என எப்போதுமே எண்ணியிருந்ததில்லை. அம்பாறையில் சம்மாந்துறை பகுதியில் கடமை செய்து அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து வருடக் கடமைக் காலம் பூர்த்தியாக வடக்குக்கு மாற்றல் தரும்படி கேட்ட எனக்கு அக்கராயன்குளத்திலுள்ள ஸ்கந்தபுரம் பகுதிக்கு மாற்றல் என்று குறிப்பிட்டு மாறுதல் கிடைத்தது. வந்ததும் கண்டேன் காட்டுக்குள் ஒரு சிறு புதுக் கிராமத்தை. காடு மட்டும் அழகாகவிருந்தது. ஆனால் அங்கு வாழும் மக்கள் அதிக தேவையுடன் காணப்பட்டார்கள். போக்குவரத்து அறவேயில்லை. பேருந்துகளின் ஓட்டமில்லை. மலிகைச்சாமான்களை கிளிநொச்சியில் வேண்டினால்தான் கட்டுப்படியாகும். கடைக்கார ஆறுமுகத்தின் வாகனம் இல்லையென்றால் வெளியே எங்கும் அசையமுடியாது. கிணறுகள் குறைவாக இருந்தது இருந்த கிணறுகளிலும் கோடையில் தண்ணீர் இராது. சிறு போகம் நெல் சாகுபடி செய்தால் மட்டும் பிரதான வாய்க்காலை அண்டிய பகுதிகளிலுள்ள கிணறுகளில் நீரைக் காணலாம். விளையாட்டுத்திடலில்லை. வாசிகசாலையில்லை. கூடிப் பேசவும் ஒரு மண்டபமுமில்லை. 5ம் வகுப்பு வரையில் படித்தலுக்கான ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெல் கொள்வனவையும் செய்தது. தியானித்துக் கும்பிடுவதற்கு ஒரு கோவிலுமிருக்கவில்லை. இத்தகைய நிலைமையில்தான் அன்றைய ஸ்கந்தபுரம் குடியேற்றமாயிருந்தது. இது 1968ம் ஆண்டைய ஆரம்ப கால நிலைமை. நான் 1968ம் வருடம் தை மாதம் ஸ்கந்தபுரத்தில் குடியேற்ற அதிகாரியாக பதவியைப் பொறுப்பேற்றேன்.

ஸ்கந்தபுரம் பாடசாலைக்கு கிட்டியதாக ஒரு நீர்த் தொட்டி கட்டப்பட்டு அதிலிருந்து நீரை சீமெந்து வாய்க்கால்கள் மூலம் குடியேற்றத்திலுள்ள மேட்டுக் காணிகளில் பயிர் செய்வதற்காக முக்கிமாக மிளகாய்ச் செய்கைக்காக வினியோகிக்க ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று 1967ல் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றுக்கொண்டிருந்தது. குளத்தின் பிரதான வாய்க்காலிலிருந்து தண்ணீர் பம்பி மூலம் தொட்டிக்கு அனுப்பப்படும். அந்நீர் மேட்டுக் காணி பயிர் செய்கைக்கு சீமெந்து வாய்க்கால்கள் மூலம் காணிகளுக்கு வழங்கப்பட வேண்டும். நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் ஒப்பந்தம் செய்தவர்கள் சீமெந்து வாய்க்கால் கட்டுமான வேலைகளை மந்த கதியில் செய்து கொண்டிருந்தமையால் உரிய நேரத்தில் முடித்து காணிகளுக்கு நீரை வழங்க எனது முயற்சி தேவைப்பட்டது.

## இணைப்புக் குழுக் கூட்டம்

அக்கராயன்குளத்திற்கான இணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாண அரச அதிபர் தலைமையில் அக்கராயன்குளம் வைத்தியசாலைக் கட்டிடத்தில் நடைபெற்றது. அச்சமயம் வைத்தியசாலை திறக்கப்படவில்லை. வேணன் அபேயசேகரா என்ற ஒரு சிறந்த நிர்வாக அதிகாரி அரச அதிபராக யாழ்ப்பாணத்தில் இருந்தார். அக்கால கட்டத்தில் கிளிநொச்சி மாவட்டம் என்று ஒன்று இருக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்த அரச அதிபர் தலைமையில் அரச காணிகளின் நிர்வாகம் நடைபெற்றது. அவருக்கு உதவியாக காணிப் பகுதிக்கு மாவட்டக் காணி அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். தற்போதைய பிரதேச செயலர் அலுவலகம் (D.S. Office) முன்னர் பிரதேச வருமானக் காரியாலயம் ( D.R.O.'s Office ) என அழைக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு குடியேற்றத் திட்டங்களில் எதுவித அதிகாரங்களுமில்லை. அக்காலத்து கிராம விதானைமார்கள் ( Village Headman ) அவர்களுக்கு கீழ் கடமையாற்றி வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்புக்குழுக் கூட்டத்திற்கு சகல திணைக்களத்திலிருந்தும் பிரதிநிதிகள் வருவார்கள். நீர்ப்பாசனப் பகுதி கட்டிடப் பகுதி சுகாதாரப் பகுதி கல்விப் பகுதி பொதுவேலைத் (தெருக்கள்) திணைக்களம் அளவைத் திணைக்களம் என்று குடியேற்றத் திட்டத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையான வேலைத் திட்டங்களை இனங்கண்டு கொள்ள இந்த இணைப்புக் குழுக் கூட்டம் நடத்த வேண்டிய தேவையிருந்தது. இந்தக் கூட்டத்திற்கு அத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் முக்கிய பங்களிப்பாளராக இருப்பார். அந்தக் காலத்தில் கிளிநொச்சித் தொகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினராக விளங்கியவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. கே. பி. இரத்தினம் அவர்கள். நீர்ப்பாசன அதிகாரிகள் தங்களின் சீமெந்து கட்டுமான வேலைகளை குறித்த நேரத்திற்குள் முடிக்காததை மறைத்து கொலனிவாசிகள் தண்ணீரைப் பெற காணிகளை ஆயுத்தமாக்கவில்லை என்ற குற்றச்சாட்டை கூட்டத்தில் முன்வைத்தார்கள். அதற்குப் பதிலளிக்க வேண்டியது எனது பொறுப்பாக இருந்தது. ஒப்பந்தக்காரர்களின் மந்த கதி வேலை பற்றி கொலனிப் படத்தை விரித்து வைத்து காணி இலக்கங்களுடன் சீமெந்து வாய்கால்கள் அமைக்கப்படாத விபரங்களை விலாவாரியாக நான் எடுத்துக் கூறியதை பாராளுமன்ற உறுப்பினரும் அரச அதிபரும் கவனித்துப் பாராட்டினார்கள். ஒரு சில தினங்களுக்குள் முடித்துவிட வேண்டும் என ஒப்பந்தக்காரர்களை எச்சரித்தார்கள். அந்த நிகழ்வு எனது முதல் முயற்சி என்பதால் எனது மனதில் பதிந்துள்ளது. சீமெந்து வாய்கால்களில் நீர் பாய்ந்தது மேட்டுப் பயிர் மிளகாய் செய்கை அமோகமான விளைச்சலைக் கொடுத்தது. மேட்டுக் காணிகளுக்கு நீரை வினியோகிக்கும் பொறுப்பை கிருஸ்ணபிள்ளை என்பவரிடம் வழங்கியிருந்தேன். அவர் அதைத் திறம்படச் செய்து கொண்டு வந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை 115 கிருஸ்ணபிள்ளை என்றாலேதான் புரியும். ஏனெனில் கிருஸ்ணபிள்ளை என்ற பெயரில் பலர் வாழ்ந்திருந்தார்கள். இவர் தற்போதும் திடகாத்திரமாக விவசாயத்திலும் மாடு வளர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றார் என்பது மகிழ்வாகவுள்ளது.

**வாசிகசாலையும் கைப்பந்தாட்டமும்**

ஒரு வாசிகசாலைத் தேவையுள்ளதை உணர்ந்தேன். தியாகராசா சுந்தரம் வரணி மணியம் சிங்கன் போன்ற வேறும் சில இளம் வாலிபர்களைக் கொண்டு கம்பு தடிகள் காட்டில் வெட்டி கொட்டில் ஒன்றை உருவாக்கினோம். மூளாய் கந்தசாமி என்ற குடியேற்ற வாசி தச்சு வேலை தெரிந்த ஒருவர். அவரிடம் ஒரு மேசையும் ஒரு வாங்கும் செய்து தரும்படி வேண்டினேன். அவர் எனது கோரிக்கையை நிறைவேற்றினார். அவர் இன்றும் ஸ்கந்தபுரத்தில் சீவித்து வருகின்றார் எனக் கேள்வியுற்று மனமகிழ்கின்றேன். வாசிகசாலை உருவாக்கப்பட்டது நான் ஒரு பத்திரிகையும் கூட்டுறவு சங்க மனேஜராகவிருந்த மகாலிங்கம் என்பவர் ஒரு பத்திரிகையும் வாசிகசாலைக்கென வாங்கிக் கொடுத்திந்தோம். வாசிகசாலை இயங்க ஆரம்பித்தது

அதன் அருகாமையில் ஒரு கைப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தையும் உருவாக்கினோம். இதற்கும் இளைஞர்களின் உதவி மட்டுமல்லாமல் நடுத்தர வயதினரும் வந்து தேவையான வேலைகள் யாவற்றையும் செய்து முடித்தார்கள். மாலை ஐந்து மணியென்றால் விளையாடச் சனம் வந்து சேர்ந்துவிடும் கைப்பந்தாட்டம் ஆறரை ஏழு மணிவரை மம்மல் பொழுதானாலும் விளையாட்டுத் தொடரும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் நானும் சிறிது நேரம் அவர்களுடன் விளையாட்டில் பங்குகொள்ளுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் பற்றிய சிந்தனை

இவ்வாறாக வாசிகசாலை கைப்பநதாட்டம் என்று இளஞர் சமுதாயத்துடன் நெருங்கிப் பழகிவரும் போது கதைத்துக் கொண்டிருக்கும் வேளையில் கோயில் ஒன்று உருவாக்கல் என்ற சிந்தனை பேச்சுவார்த்தையில் வெளிவந்தது. அப்போது அவர்கள் கோயில் சம்பந்தமாக தாங்கள் என்ன செய்ய முடியும்? அது பெரியவர்களின் வேலை என்று அலுத்துக் கொண்டார்கள்.

பல காலமாக கோயில் கட்ட வேண்டுமென்று முயற்சிகள் நடைபெற்று வந்திருந்தது என்பது உண்மைதான். கூட்டங்கள் நடைபெறும் ஆனால் எந்த ஆக்கபூர்வமான முடிவுகளும் எடுக்கப்படாது அரைகுறையில் இரண்டு பகுதியினருக்கிடையே வாய்சண்டை எழும்ப கூட்டத்திற்கு வந்திருந்த சனம் கலைந்து போகத் தொடங்கிவிடும்.

அக்காலத்தில் ஸ்கந்தபுரத்துக்கென்று ஒரு கோயிலுமிருக்கவில்லை. அக்கராயன்குளத்திற்கு கீழே முறுகண்டிக்குப் போகும் வீதியில் குளம் கட்டும்போது நீர்ப்பாசன திணைக்களத்தினால் கட்டப்பட்ட பிள்ளையார் கோவில் மட்டுமே முழு அக்கராயனுக்குமான ஒரே கோவிலாக இருந்தது. ஸ்கந்தபுரத்தில் தற்போதுள்ள கோவிலுக்கு முன்பக்கத்திலுள்ள வீதியில் பாலை மரத்தோடிருந்த கோவிலிலேயே அன்று வாழ்ந்த மக்கள் போறவாறபோது கும்பிட்டுக் கொள்வார்கள். அந்த மரம் தற்போது இல்லை. அந்த இடத்திற்கு மேலாக மின்சாரக் கம்பிகள் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் மின்சாரச் சபையினரே அம்மரத்தைத் தறித்துவிட்டார்களென எனக்கு தற்போது கூறப்பட்டது. அண்மைக் காலம் வரை அதை பழைய கோவிலென மக்கள் கும்பிட்டு வந்திருந்தார்கள். காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனமாகும் போது பழையன கழியவேண்டியது இயற்கையே. அக்காலத்தில் அம்மரத்தடியில் திருநீறு சந்தனம் வைக்கப்பட்டிருக்கும். காலை மாலை முடிந்தளவுக்கு ஆராத்தி காட்டப்பெற்று பூசை நடைபெறும். நெடுந்தீவைச் சேர்ந்த அம்பலவாணர் மாரிமுத்து என்பவரே அந்தச் சின்னக் கோவிலுக்கு பூசாரியாக சமய ஆசாரங்களுடன் செயற்பட்டு வந்தார். இவர் அப்போது கரும்புத் தோட்டத்திலே கங்காணியாகவும் வேலை செய்து வந்தார். அதனால் அவரை கங்காணியார் என்றும் மக்கள் அழைப்பார்கள்.

## கரும்புத் தோட்டம்

நெல் பயிரிட குளத்தில் நீர் இருந்தது. மாரிப் பெரும் போகம் காணி கிடைக்கப்பெற்ற எல்லோரும் நெற்பயிர் செய்வார்கள் அல்லது குத்தகைக்கு கொடுத்து செய்விப்பார்கள். சிறுபோகமும் மாரி மழையைப் பொறுத்து குறைவாகவோ கூடுதலாகவோ அரச அதிபரால் நடத்தப்படும் தண்ணீரக் கூட்டத் தீர்மானத்தின்படி ( cultivation meeting ) பயிர் செய்வார்கள். அதனால் மேட்டுக் காணிக்கு ஏற்று நீர்ப்பாசன திட்டம் வர முன்னர் மேட்டுப் பயிரும் செய்ய முடியாத நிலைமையில் கரும்புத் தோட்டம் குடியேற்ற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. கரும்புத் தோட்டம் கொழும்பில் அரச நிர்வாகத்திலும் தனியார் துறையிலும் பதவியில் இருந்த மண் ஆராய்ச்சி விவசாயம் கரும்புச் செய்கை போன்ற துறைகளில் மிகுந்த அறிவும் அனுபவமும் ஆற்றலும் கொண்ட பத்துக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட பதிவு செய்த தனியார் பங்குடைமை தாபனமாகும். மண் ஆராய்ச்சியில் திறமைசாலியான சொயில் கந்தையா ( Soil Kandiah ) எனப் பெயர் பெற்ற ஒருவர் தலைமையில் இந்த கரும்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாபனத்திற்கு அம்பாறையிலுள்ள ஹிங்குராணை கரும்புத் தோட்டக் கூட்டுத்தாபனத்தில் பல வருடங்கள் கரும்புப் பயிர் செய்கை அத்தியட்சகர் பதவியில் பணிபுரிந்தவரான விஜயநாயகம் என்பவர் முகாமையாளராக பொறுப்பேற்று நடத்திவந்தார். அங்கு கரும்புச் செய்கை உற்பத்திக்கு அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டு வந்த காலத்தில் வேலைவெட்டி இல்லாதிருந்த குடியேற்றத்தில் வசித்த மக்களுக்கும் அங்கு வேலை வாய்ப்புக்கள் கிடைத்திருந்ததால் தொழில் செய்ய வேலை கிடைத்து பணப்புழக்கமும ஏற்பட்டது. கங்காணி மாரிமுத்தரும் கரும்புத் தோட்டத்தில் வேலை செய்து மாதச்சம்பளம் பெற்று வந்திருந்தார்.

கரும்புத் தோட்டத்திலிருந்து வேலை முடிந்து மாலைநேரம் வந்ததும் மாரிமுத்தர் குளித்து முழுகிவிட்டு கோயிலுக்கு வந்து துப்பரவு செய்து பூசையை நடத்துவார். காலையிலும் பூசையை செய்து முடித்துவிட்டே தொழிலுக்கு செல்வார். அவ்வாறான கோவில் காரியங்களில் ஊக்கங்கொண்ட ஒருவரை தற்காலத்தில் காண்பது மிகவும் அரிது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவரையும் அவரின் பணியையும் நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தி பெற்றிருக்க ஸ்கந்தபுர முருகன் அருள் புரியட்டும்.

**கோவில் கூட்டங்கள்**

நான் ஸ்கந்தபுரத்திற்கு மாற்றலாகி வருமுன்னரே கோவிலுக்கான வேலைகளை செய்வதற்கு ஒரு ஆலய சபையை உருவாக்கியிருந்தனர். பல கூட்டங்களையும் காலத்திற்குக் காலம் கூட்டி வேலைத் திட்டங்களை பிரேரணையாக கொண்டு வந்து தீர்மானம் எடுத்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்த தகுந்த முன்னிலையாளர்கள் ( Leadership )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதிருந்தமையாலும் இரு பிரிவினை கொண்ட கோஷ்டி மோதல்கள் உட்பூசல்கள் தொடர்ந்திருந்மையாலும் எதுவும் நடைமுறையில் செயற்படுத்த முடியாது போயிற்று. எனக்கு முன்னராக குடியேற்ற அதிகாரியாக சேவை செய்த சம்பந்தர் என்ற பெயருடைய கடவுள் பக்தி கொண்டவர் கோயிலைக் கட்டுவதற்கான ஒரு இடத்தை தெரிவு செய்து அதில் ஒரு கோவில் நிலையம் எடுப்பவரைக் கொண்டு மூலஸ்தானம் கட்டுவதற்கு நிலையம் எடுத்து அதை அடையாளப்படுத்தி வைத்து மாரிமுத்தர் போன்ற கோவிலுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு காட்டிச் சென்றுள்ளார்.

1971ம் ஆண்டு நாங்கள் கோவிலைக் கட்டும் போது இந்த நிலையத்தை மையப்படுத்தியே கோவில் மூலஸ்தானத்தை உருவாக்கினோம் என்பது இங்கு குறிப்பிடவேண்டியது.

இவ்வாறு கோவில் கூட்டங்கள் நடைபெற்றாலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் எதுவும் நடைமுறைப்படுத்த முடியாது மக்கள் குழம்பியிருந்த வேளையில்தான் என்னைச் சுற்றியிருந்த இளைஞர் கூட்டம் தாங்களும் கூட்டத்திற்கு சமூகம் தருவதாகவும் என்னை கோவில் சபைக்காக வேலையைப் பொறுப்பேற்று செயற்படுத்துமாறும் வேண்டிக் கொண்டனர்.

அக்காலத்தில் வயதில் பெரியவர்கள் பலர் கோவில் கூட்டங்களுக்கு வருகை தருவார்கள். அவர்களில் கந்தையா என்ற பெயரில் பலர் இருந்தமையினால் அவர்களைப் பட்டப் பெயருடன்தான் அழைப்பது வழக்கம். தலைவர் கந்தையா என்றெருவர். இவர் புங்குடுதீவை சேர்ந்தவர். இவரே அனேகமாக சகல சங்கங்களுக்கும் தலைவராக இருப்பார். ஆதனால் தலைவர் என்ற பட்டம் பெயரின் முன்னால் அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிக்கொண்டது. மிகவும் நல்லவர் எல்லோருடனும் சமாளித்துக் கொண்டு போகும் சிறந்த பண்பு இருந்தபடியால்தான் இவர் தலைவர் என்ற பெயரை பெற்றிருந்தார் போலும். இவரைவிட பியோன் கந்தையா சங்கானைக் கந்தையா கரணவாயக் கந்தையா அனலைதீவுக் கந்தையா என மேலும் பலக் கந்தையாக்கள் குடியிருந்த காலம் அது. இவர்கள் தவிர முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர்களான ஸகந்தபுரத்தில் உப தபால் அதிபராயிருந்த தம்பையா என்பவர் நெல் கொள்வனவு மனேஜர் மணியம் எனப் பெயர் புழக்கத்திலிருந்த தம்பையா சுப்பிரமணியம் என்பவர் விவசாயப் பகுதி மேற்பார்வையளராகவிருந்த சின்னத்தம்பி ஓவர்சியர் ஆகியவர்களினால் கோவில் உருவாக்கலுக்குச் செய்த பணி அளப்பரியது. என்னுடன் காணி ஆணையாளர் திணைக்களத்தில் மேற்பார்வையாளர்களாக பணிபுரிந்த இராசையா வல்லிபுரம் அரியபுத்திரன் ஆகியோரின் கோவிலுக்கான பங்களிப்பையும் இங்கு குறிப்பிட வேண்டும். நாகேந்திரம் பரராஜசிங்கம் செட்டியார் என அழைக்கப்படுபவர் செல்லையா சண்முகம் இளையகுட்டியர் அண்மைக் காலத்தில் கோயில் சபைத் தலைவராக செயற்பட்ட இராசையா போன்றோர்களும் கோயில் கூட்டங்களுக்கு வருகை தந்தும் நிர்வாக சபையில் இணைந்தும பணி புரிந்துள்ளவர்களில் சிலராகும். வேறும் பலர் இங்கு பெயர்கள் குறிப்பிடாதவர்களும் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார்கள் அவர்களின் பெயர்கள் ஞாபகத்தில் இல்லை. அவர்களில் அனேகர் கூட்டத்திற்கு வந்தாலும் வெறுமனே பார்வையாளராக வீற்றிருந்து சென்றுவிடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயிற் காடு வெட்டும் சிரமதானம்

இளைஞர்களின் தூண்டுதல் பேரில் கோவிலுக்காக ஐந்து ஏக்கர் மட்டில் இருந்த காட்டை வெட்டித் துப்பரவாக்க முடிவு செய்யப்பட்டது. கோயிலுக்காக முன்னைய குடியேற்ற அதிபர் சம்பந்தரால் மூலஸ்தானம் கட்டுவதற்கு அடையாளம் காணப்பட்ட இடத்தை மையமாக வைத்து சுற்றிவரவுள்ள காணி முழவதையும் வெட்டுவதற்கு தயாரானோம். முருகன் ஆலயச் சபையினருக்காக அதன் செயற்பாடுகளை மேற்கொள்ள எனக்கு அதிகாரமளிக்கப்பட்டது. இது சம்பந்தமாக நான் கச்சேரியில் இக்குடியேற்றத்திற்குப் பொறுப்பாயிருந்த மாவட்டக் காணி அதிகாரி திரு ஏ.சி. வேலுப்பிள்ளை அவர்களுடன் தொடர்பு கொண்டு அவரின் அனுமதியையும் ஆசியைப் பெற்று அவரையே சிரமதானப்பணிக்கு தலைமை வகிக்கும்படி வேண்டினேன் திகதியும் குறித்து மக்களை சிரமதானம் செய்ய வரும்படி அறிவித்தல் (Notice) கிளிநொச்சியில் அச்சுக் கூடத்தில் செய்வித்தும் ஒரு ஒலிபெருக்கி செற்றையும் ஒழுங்கு பண்ணியிருந்தேன். மேலும் ஆறுமுகம் கடை கூட்டுறவுச் சங்கம் கரும்புத் தோட்டம் மூலமாக அரிசி பருப்பு சாமான்களும் வேறும் சில அரச திணைக்கள உத்தியோகஸ்தர்களிடம் சிறு தொகைப் பணம் பெற்று வேறு செலவுகளுக்குமாக சிரமதானிகளுக்கு மதிய உணவைத் தயார் செய்ய தயாரானோம். ஊர்ப் பெண்களை சமையல் செய்ய வரும்படி அழைத்தோம். சிரமதானிகளில் கூடுதலானோர் கோடரியையும் காட்டுக் கத்தியையும் சிலர் மண்வெட்டியையும் கொண்டுவர ஆலோசன்ன கூறியிருந்தோம்.

1971ம் ஆண்டு புரட்டாதி மாதம் 03ம் திகதி காடு வெட்டும் சிரமதானம் காலை 7.00 மணிபோல் ஒலிபெருக்கியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதஸ்வரம் பக்திப் பாடல்கள் காற்றுடன் கலந்து காதைத் துளைக்க அதனுடன் மரங்கள் வெட்டும் சத்தமும் ஒன்றிணைய ஒரு புத்துணர்வுடன் சிரமதானப்பணி ஆரம்பிக்கப்பட்டது. மளமளவென்று மரங்கள் சரிந்தன. கொப்புகள் கிளைகள் தரிக்கப்பட்டன. இடையிடையே தேனீர் பானம் வேலை செய்யும் இடத்திற்கு கொண்டு சென்று பரிமாறப்பட்டது. அத்தருணம் என்னிடமிருந்த அக்காலத்து கருப்பு வெள்ளை கமெராவினால் காடு வெட்டும் சில காட்சிகள் படமாக்கப்பட்டன. பகல் 1.00 மணிக்கு முன்னரே காடுகள் தரை மட்டமாயின. வேலையின் நிமித்தம் களைத்திருந்த காடு வெட்டிய சிரமதானிகளின் மதிய போசனம் வீதியோர மரநிழலின் கீழேயே பரிமாறப்பட்டது.

## கோவிலுக்கான நெல்

காடு வெட்டியாயிற்று துப்பரவு பண்ணியாயிற்று பெரும் கட்டைகள் மட்டும் காணியில் இருந்தன. சில காலம் வெட்டப்பட்ட காணியில் எதுவித வேலையும் செய்யாது மூலஸ்தானம் அமையவுள்ள இடத்திற்கு முன்னால் ஒரு கொட்டில் அமைத்து அதில் படங்களை வைத்து வணக்க ஸ்தானமாக ஆக்கப்பட்டது. அங்கேதான் பூசைகள் ஆராத்தி எடுத்தல் நடைபெற்றன. இனிக் கட்டிட வேலைகள் ஆரம்பிக்க வேண்டியிருந்தது. கிளிநொச்சி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க சமாஜத்திற்கு நான் மாவட்ட காணி அதிகாரி திரு. வேலுப்பிள்ளை அவர்களுடன் சென்று ஸ்கந்தபுரச் சங்கத்தால் நெல் கொள்வனவு செய்யும் போது கோவில் சபைக்கும் நெல் எடுக்கப்படுகிறதென்றும் அந்நெல்லை வேறாக பாரமெடுத்து அதற்கேற்ற பணத்தை கோயில் சபை பெறத்தக்கதாக பணத்தை கொடுக்க ஒழுங்குகள் செய்தோம். இந்த ஒழுங்கால் கோவிலுக்கு நெல் மூலம் வருவாய் கிடைத்தது. ஒவ்வொரு நெற்பயிர் செய்கையாளனும் தான் அறுவடை செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லில் நூறு புசலுக்கு ஒரு புசல் நெல்லை கோவிலுக்கு கொடுக்க ஒத்துக்கொண்டு அதன்படி நெல் கொள்வனவு மனேஜர் நெல்லை கோவிலுக்கென புறம்பாக சேகரிப்பார். இந்த சிறப்பான வேலையை நெல் கொள்வனவு மனேஜராகவிருந்த மணியம் என்கின்ற தம்பையா சுப்பிரமணியம் செய்து வந்ததால கோயில் வளர்ச்சி பெறக் கூடியதாகவிருந்தது. நான் மாற்றலாகி போகும் வரை இந்த ஏற்பாடு நடைமுறையில் இருந்தது.

## கோவில் மூலஸ்தானக் கட்டுமானம்

கோவிலை கட்டுவதற்கு ஸ்தபதியார் ஒருவர் தேவைப்பட்டார். அந்நேரத்தில் யாழ்ப்பாண கச்சேரியில் மேலதிக அரசாங்க அதிபராக இருந்த திரு. முருகேசம்பிள்ளை என்பவர் கோவில் விடயங்களில் ஈடுபாடு கொண்டவராவார். இவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலத்தின் சம்பந்தியாவார். அதாவது திரு. குமார் பொன்னம்பலத்தின் மாமனாவார. மக்களிடையே செல்வாக்கு மிகுந்தவர். அவரைக் கண்டு ஸ்தபதி ஒருவர் தேவை பற்றி எடுத்துக் கூறினேன். அவர் நவாலிக்கு சென்று ஸ்தபதி விஸ்வலிங்கம் எனக் கேட்டு விசாரித்துக் கண்டுபிடித்து அவரைக் கூட்டிச் செல்லுமாறு வேண்டிக்கொண்டு எங்களது முயற்சிக்கு வாழ்த்தும் தெரிவித்துக் கொண்டார். அதே போல் நவாலியில் ஸ்தபதியாரை சந்தித்து திகதி குறித்து ஸ்கந்தபுரம் கூட்டிச் சென்றேன். என்னுடைய அரச இல்லத்தில் முன் அறையில் தங்க வைத்து வேலையை தொடங்க சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தேன். மூலஸ்தான கட்டுமான வேலைகள் ஆரம்பமாகி சுவர்கள் கட்டி எழுப்பும் காலத்தில் 1973 தை மாதம் எனக்கு மாற்றம் கிடைத்து வவுனியா மாவட்டம் சென்றுவிட்டேன். ஸ்கந்தபுரத்தில் ஐந்து வருட அரசாங்க சேவையை மனநிறைவோடு முடித்துக் கொண்டு மேடை கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபெருக்கி அமைத்து தபால் அதிபர் தம்பையா அவர்கள் தலைமையில் பலரின் பாராட்டுக்களுடன் விடைபெற்றேன்.

**வேறும் சேவைகள்**

எனது சேவைக் காலத்திலேயே இணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு போக்குவரத்து சபையுடன் தொடர்பு கொண்டு பேச்சுக்கள் நடத்தி முதன்முதலாக ஸ்கந்தபுரத்திற்கு பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.

பிரதான வாய்க்காலில் நீர்ப்பாசன திணைக்களத்தின் வழிகாட்டலோடு வண்டல் மண் அகற்றும் வேலைகள் சிரமதானம் மூலமாக செய்விக்கப்பட்டது. பிரதான வீதியில் இரு பக்கத்திலுமுள்ள வீதியோரப் பற்றைகள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

**-முற்றும்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.09.1971 நடைபெற்ற காடு வெட்டும் சிரமதானப் பணிக்கு மக்கள் திரளும்படி வெளியிட்ட அறிவித்தல்

உ
சிவமயம்



# ஸ்கந்தபுரம் முருகன் ஆலய
# சிரமதானத் திருப்பணி

அன்புடையீர் !

முன்னேறிவரும் ஸ்கந்தபுரம் குடியேற்றத் திட்டத்தில்
புத்தொளி பிறக்க யாவரும் இன்புற்றுவாழ
முருகன் ஆலயத் திருப்பணியொன்றை மேற்கொண்டுள்ளோம்.
அதன் முதற்படியாக கிளிநொச்சி மாவட்டக் காணி அதிகாரி

**திரு. A. C. வேலுப்பிள்ளை அவர்களின்**
**தலைமையின் கீழ்**

**ஒரு மாபெரும் காடுவெட்டும்**

# சிரமதானம்

**3-9-71 வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில்**

ஸ்கந்தபுரம் முருகன் ஆலயத்துக்கருகாமையில் நடைபெறும். அத்தருணம் அன்பர்கள் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி சிரமதான இயக்கத்திற்கலந்து இப்புனிதபணியை பூர்த்திசெய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

க. நமநாதன்
குடியேற்ற உத்தியோகத்தர்
முருகன் ஆலய சபையினருக்காக


ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி. 22-8-71.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.09.1971 அன்று கோவில் காணியில் காடு வெட்டும் சிரமதானப் பணியில் ஈடுபட்டவர்களின் படங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968 - 1972 வரையில் ஸ்கந்தபுரம் குடியேற்ற திட்டத்தின் குடியேற்ற அதிகாரி தனது அரச இல்லத்தில்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நவாலி விஸ்வலிங்கம் ஸ்தபதி கோவிலின் ஆதி மூல வேலைகளில் ஈடுபட்ட வேளையில்



ஸ்கந்தபுரத்துக்கு முதற் தடவையாக பேரூந்து வருகை 1972



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மணிக்கோபுர கட்டுமானப் பணியின் போது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




2012ம் ஆண்டு நடைபெற்ற கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக நிகழ்வுகளின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்தல்

முருகப் பெருமானின் அருளினால் வேண்டப்பெற்ற மணிக் கோபுரத் திருப்பணி நியமித்த நேர காலத்தில் எதுவித தடங்கலுமின்றி செவ்வனே சிறப்பாக நிர்மானித்து முடிக்கப்பட்டது.

இத்திருப்பணியை செய்வதற்கு பற்பல உதவிகளைச் செய்தவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் எனது நன்றிகள் தெரிவிப்பது எனது கடமையாகும்.

இந்த திருப்பணியை செய்ய எண்ணியுள்ளதை முன்னால் தலைவராகிய திரு.க.இராசையா அவர்களிடமே முதலில் நான் தெரிவித்தேன். அவர் தன்னால் முடிந்ததைச் செய்வதாக கூறி உற்சாகமளித்து காரியங்கள் செய்தமைக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

மேலும் இந்தத் திருப்பணியை நிர்மானம் செய்ய ஸ்தபதி குகேந்திரன் ஆசாரியாருக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். குறித்த திகதிக்கு முன்னரே எல்லாவித பணிகளையும் செய்து முடித்து எல்லோரது பாராட்டுகளையும் பெற்று விட்டார்.

மேலும் இந்த மணிக்கோபுர திருப்பணியை செய்ய சகல விதத்திலும் ஒத்தாசை புரிந்த கோயில் நிர்வாகத்திற்கும் எனது நன்றியறிதலை தெரிவிக்கின்றேன்.

கோயில் பிரதம குருக்கள் தன்னால் செய்ய வேண்டிய சகல கிரிகைகளையும் செய்து ஆசியுரையொன்றையும் தந்து இத் திருப்பணியை ஆசிர்வதித்தமைக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு சிறிதரன் ஆசிச் செய்தியை அனுப்பி ஊக்கப்படுத்தியதற்கு எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

முக்கியமாக இந்த மணிக்கோபுர கும்பாபிஷேக மலரினை வெகு அழகாகவும், சிறப்பாகவும் அச்சிலேற்றிக் கொடுத்த ஓம் பிள்ளையார் அச்சகத்தாருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இத் திருப்பணியை செய்வதற்கு வேறும் உதவியவர்கள் என்னால் குறிப்பிடப்படாது விட்டிருந்தாலும் அவர்களுக்கும் எனது நன்றிகளை இத்தால் தெரிவிக்கின்றேன்.

கனக நமநாதன்
மணிக்கோபுர ஸ்தாபகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0765324463
0779475400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மணிக்கோபுர ஸ்தாபகருடன்
# ஸ்தபதி க.குகேந்திரன்






பிள்ளையார் அச்சகம், நல்லூர். T.P: 0774818305

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org